# சீர்திருத்த நான் மணி மாலை

❋

ஆசிரியர்:
புலவர்-பி. சுப்பையயன்

155
F02

❋

1950
சுந்தரம் பிரஸ்,
சௌக்கார்பேட்டை, சென்னை-1.

[முதல் பதிப்பு] [விலை 2 அணா

# நூன் முகம்.

சீர்திருத்த நான்மணி மாலை என்னும் பெயரே, இதன் கருத்தைத் தெளிவு படுத்துகின்றது. இந் நூல் சீர்திருத்தக் கருத்துக்களால் அமைக்கப்பெற்றுள்ளது. இதன் கண் வெண்பா, ஆசிரியப்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை ஆகிய பாக்கள், அந்தாதி முறையில் அமைந்துள்ளன. நாற்பது பாக்களைக்கொண்ட இந் நூல் எளிய, இனிய முறையில் அமைந்துள்ளது. பள்ளி மாணவர்கட்கும், சீர்திருத்த நோக்குடைய செம்மையாளர்க்கும் இது நல் விருந்தாக அமையும். "சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்" என்பதுபோல, இச் சிறு நூல் நாட்டிற்குச் சிறிதளவேனும் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புமாயின், அதனைப் பெற வரும்பேறாகக் கருதுவேன். இந் நூலை வெளியிடும் முயற்சியில் பெரிதும் உதவி புரிந்த திருவாளர்கள் ஹென்றி தேவதாஸ், M. S. சாமி, சாமுவேல் தேவப்பிரசாத் ஆகியோர்க்கு எனது நன்றி.

தமிழன்பர்கள் இந்நூலைப் படித்து இன்புறுமாறு,
பணிவுடன் வேண்டுகின்றேன்.

தாசர்புரம்,
தின்னனூர்.

இங்ஙனம்,
பி. சுப்பையன்.

# சீர்திருத்த நான்மணிமாலை

## முகவுரை

உயர்திரு சுப்பையனார் அவர்களால் இயற்றப்பட்ட சீர் திருத்த நான்மணி மாலையைக் கண்ணுற்றேன், மட்டிலா உவகை பூத்தது உள்ளம்! காலத்துக்கேற்ற பணியைச் செய்ததாக கருது கின்றேன். தற்காலம் நம் தேசத்தின் நிலை, தமிழர்களின் நிலை, அவர்களது பண்பு, அவர்கள் மேற்கொண்டுள்ள குருட்டு நம்பிக்கைகள் அவைகளைப் போக்கும்முறை முதலியவைகளைச் சீரிய முறையில் தமிழர்களுக்குப் போதிக்கும் நூல் இது ஒன்றே.

காலப் போக்கை அனுசரித்து மற்ற தேசங்களோடு நம்மை ஒப்புநோக்கி பழம்பெருமை பேசித்திரியாமல், உண்மையான நிலையை எடுத்துரைக்கிறார் ஆசிரியர். ஆசிரியர் தம் சீர்திருத்தக் கொள்கை தமிழ் நாட்டில் மட்டுமல்ல, தேசம் முழுவதும் பரவும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. செய்யுட்களால் இயற்றப்பட்டிருப்பினும், யாவர்க்கும் பொருள் விளங்கும் முறையில் தெளிவாகச் செய்துள்ள இந்நூல் தமிழ் நாட்டுக்கும் தமிழர்கட்கும் பெரிதும் பயன் படுமென நம்புகிறேன். இத்துறையில் இவரை மென்மேலும் ஊக்க வேண்டியது பொது மக்களுடைய கடமைகளில் ஒன்றாகும்.

30 மார்ச்சு 1950
சென்னை நகர்.

கு. நடேசநாட்டார்
தமிழ்ப்பண்டிதர், சென்னை
நகராண்மை கழகம்.

# சீர்திருத்த நான்மணி மாலை

## 1 தமிழ்த்தாய் வணக்கம்

### வெண்பா

“சீர்திருத்தப் பாமாலை [1]செப்புதற்கென் செந்தமிழே,
[2]ஏர் மிகுந்த நின்னடியே ஏத்தினன்காண்—பார்தனிலே
செந்நெறியே மேலோங்கிச் சீர்கேடு நீங்குதற்கு
உன்னருளே [3]பாலிப்பாய் [4]ஓர்ந்து”

## 2 தமிழரின் சோர்வுநிலை.

### நேரிசை ஆசிரியப்பா

“ஓர்ந்தே கருமம்[1]உஞற்றுதல் உலகத்து
தேர்ந்தோர் செய்கை[2]திறமிலர்க் காமோ
எத்துறைதனிலும் எகிடும் காலை
அத்துறை உண்மை ஆய்தல்நம் கடனே
[3]ஆய்வுரை நீங்கிய அறிவில் மாக்களாய்
தேய்வுறு கின்றேம் தெரியின் உலகீர்
அணுவால் உலகை ஆண்டிடும் நிலையில்
துணிவில ராகித் தூங்குதல் நன்றோ?
பழமை என்னும் பாசியின் நீங்கி
[4]கிழமைக்காகக் [5]கிளர்ந்தே எழுமின்
எல்லாம் இனிதே நிகழும்
அல்லாத எவையும் அணுகிடா நம்மே.”

குறிப்புரை.

(1)
1. சொல்லுதல்
2. அழகுமிகுந்த
3. பாதுகாப்பாய்
4. உணர்ந்து

(2)
1. நடத்துதல்
2. திறமையற்றவர்
3. ஆராய்ச்சிஉரை
4. உரிமைக்காக
5. உற்சாகத்துடன்

## 3 வீடு பேற்றில் விருப்ப

### விருத்தம்

"நம்மவர் காதல் வீரம் [1]நயனமை தீரம் யாவும்
[2]இம்மையின் நீங்கி யெல்லாம் இறைவனின் [3]ஆணையென்று
[4]அம்மையின் வீடு காணும் அவாவினர் ஆதல்கேட்டு
[5]செம்மையின் வல்லார் ஏசிச் சிரித்திடச் செய்தல்நன்றோ!

## 4 மகள் மதத்தால் கட்டுண்ட நிலை.

### கட்டளைக்கலித்துறை

'நன்மையும் தீமையும் [1]ஓர்கிலா ஓர்[2]இனம்நண்ணியிங்குப்
[3]புன்மைகள் சால்மதப் போதையை ஊட்டியே போந்தமையால்
வன்மைசால் [4]வேங்கைகள் செம்மறிக் கூட்டிடை வந்துநின்று
[5]தன்மையில் ஆடெனத், தாம்நினைந்தேங்கு தல்போன்றதன்றே

(3)
1, நன்கு அமைந்த
2. இப்பிறவியில்
3, கட்டளை
4. மறுமையில்
5. நேர்மை

(4)
1. உணராத
2. ஆரியக்கூட்டம்
3. கீழ்மையான
4. வேங்கைப்புலிகள்
5· இயல்பில்

## 5 சாதிப் பிரிவு.

### வெண்பா

"அன்றுள்ளோர் சாதியெனும்[1]ஆபாச நோய்தன்னை
[2]பொன்றப் புதைத்துப் [3]புறங்கண்டார்—வென்றியுடன்
ஒன்றே குலமென்று ஓர்மைக்கு [4]வித்திட்டார்
இன்றே நிலை குலைந்த [5]திற்று."

## 6 நால்வகை வருணம் உண்டானவிதம்

### ஆசிரியப்பா

இற்றென ஒன்றை இடித்தறி விக்கும்
[1]பெற்றியர்ப் பெறுதல் பிறவியிற் [2]பேறே
அன்னோர் கூறும் அறிவுரை கொள்ளின்
என்னே உலகென்று இரங்கிடப் போமோ?

பிறவியில் 3பேதம் இன்றே செயலில்
அறிவில் உண்டென அறைந்தனர் வள்ளுவர்
அந்நெறி கொள்ளாது ஆரியர் நூலாம்
4பொய்நெறி மனுவைப் போற்றினர் மன்னே
நால்வகை 5வருணம் நன்கு வேருன்றி
மேல்கீழ்ப் பேதம் மிக்கது இதனை
உணர்ந்தால் அன்றி உலகில்
6உய்விலை யென்றே உரைப்பது நன்றே.”

(5) 1. கீழ்த்தரமான
2. இறந்தொழிய
3. வெற்றிகொண்டார்
4. விதை
5. முறிந்து

(6) 1. தன்மையுள்ளோர்
2. நற்காலம்
3. வேறுபாடு
4 பொய்யானவழி
5. சாதிகள்
6. பிழைக்கும்வழியில்லை

7 மோட்ச—நரகம்

விருத்தம்

நன்மையின் வல்லார் 1வீட்டை 2நண்ணுவர் அல்லாரெல்லாம்
3மன்னுவர் நரகியென்று மயக்கினர் மதியிலார்கள்,
4உன்னிடின் இவைகள் பொய்யே உண்மையிற் கடமை
[யென்னும்
5செந்நெறி உணரினல்லால் 6சேர்பெறலில்லை மன்னே!

8 மூடக் கொள்கை நீக்கம்.

கட்டளைக் கலித்துறை

“மன்னவர் ஆட்சியை 1மாநிலத்தின்றியே 2மாய்த்தது போல்
3முன்னவர் கொள்கையில் மூடமாய் எண்ணிடும் தன்மையன
4உன்னியே 5நீக்குதற் பாலனவாகும் 6உளுற்றிலமேல்
7பின்னவர் தூற்றுவர் பேதையர் பட்டமும் பெற்றிடு
[வோம்.

(7) 1. மோட்சவீடு
2. அடைவார்
3. நிலை பெறுவார்

(8) 1. பூமி
2. அழித்ததுபோல்
3. பெரியோர்கள்

4. நினைத்தால்
5. நல்வழி
6. சிறப்பு

4. நினைத்து
5. நீக்கத்தக்கவை
6. செய்யாவிடில்
7. பின்வருஞ்சந்ததிகள்

9 விதவைத் திருமணம்.

வெண்பா

"பெற்றிழந்தால் [1]தன்பதியை பேசாமல் பெண்ணினத்தை
குற்றுயிராய் வைத்திருத்தல் குற்றமதே—[2]எற்றாலும்
மீண்டும் மறுமணத்தை [3]மேன்மைத்தாய்ச் செய்குவதே
[4]ஆண்டகையினார்தம் அறிவு."

10 விதவையின் கண்ணீர்.

ஆசிரியப்பா

"அறிவிற் சிறந்த [1]ஆரணங் காயினும்
பிறவியின் இயல்பைப்பெயர்த்திடற் காமோ
செஞ்சொற் கிளியைச் சிறையிடல் மான
அஞ்சொல் மகளிரை [2]அரணத்திருத்தின்
அன்னார் துன்புற்று அழுதிடுங் கண்ணீர்
[3]கொன்னே செலுமோ கூறுமின் மாந்தர்காள்
ஆடவன் [4]தாரம் அற்றிடும் காலை
[5]பீடுடன் மறுமணம் பெற்றிடும் உரிமையை
[6]நாரியர் தமக்கும் நல்கி
வீரராய் விளங்கிட வேண்டுவல் யானே."

(9)
1. தன் கணவனை
2. எவ்வகையாலும்
3. சிறப்பாக
4. மேம்பாடுடையபெரியோர்

(10)
1. பெண்
2. பாதுகாவல்
3. வீணாக
4. மனைவி
5. பெருமை
6. பெண்கள்

11 திருமணத்தில் புரோகிதர்

விருத்தம்

"யானெனத் தருக்கும் பார்ப்பார் இனியசம் மணத்திற் [1போந்து
தானமாய்ப் பொருள்கள் வாங்கித் 2தகவிலாமொழியால் ஏதோ
3ஈனமாய் உரைத்து நம்மை எய்த்திடல் நன்றோ இந்த
மானமில் செயலைநீக்கும் 4மாண்புறு நாளும் என்றோ"!

12 திதியைப் பற்றிய எண்ணம்.

கட்டளைக் கலித்துறை

"என்றுமே மன்னுவர் நம்முன்னோர் 1புத்தெனும் ஒருலகில்
என்று பொய் கூறியே எய்த்திடும்2ஈனரைக் கண்டு நம்மோர்
சென்றவர் காலினில் வீழ்ந்து காணிக்கையைச் செய்குவரேல்
நன்றெனச்சொல்வரோ 3நாவலர் 4ஞானிலம் போற்றிடுமோ."

(11) 1. வந்து
2. வடமொழி
3. கீழானசொற்களால்
4. சிறப்புமிகுந்த

(12) 1. புத்என்னும் பெயலர உடைய
2. கீழ்மக்களை
3. புலவர்
4. உலகம்.

13 மறையோர் குலத்தின் தன்மை

வெண்பா

"போற்றின் 2இறையென்னும் போற்றுரைக் கால்மிதித்து
காற்றில் 2பதர்போலக் காட்டிடுமே—மாற்றுரை
வஞ்சித் 3தாக்கரென வாழ்வை யொழித்திட்ட
4குஞ்சித் தலையார் குலம்,"

14 சீர்திருத்தப் பெரியார்கள்

ஆசிரியப்பா

"குலமும் சாதியும் குறுகிய நோக்கமும்
1அலகில் பொய்யும் கலகமும் வஞ்சமும்
அறவே நீக்கும் அருஞ் செயல் தன்னில்
2திறம் சால் மாக்கள் மறத்துடன் புக்கனர்

3இராஜா ராமும் இராமலிங் கடிகளும்
வசா மரபின் இரவீந்திர நாதரும்
காந்தி யடிகளும் கலங்கா நெஞ்சனும்
4எந்தல் எங்கள் ஈ. வே. ராவுடன்
பற்பல வீரரும் பாங்குட னுழைத்தும்
அற்பச் செயல்கள் அகன்றிட வில்லை
இனிவரும் வீரன் துணிவுடன் நின்று
மனித இயல்பின் மாறுனவற்றை
அடியோ டழிப்பின் அல்லது
5ஆக்க மில்லென அறைவர் கண்டோரே.!"

(13) 1. கடவுள் என்றுசொல்லும்
2. நெற்பதர் போல
3. இராக்கதர் என்று
4. உச்சிக்குடுமி

(14) 1. அளவற்ற
2. திறமைமிக்க
3. இராஜராம்மோகன்ராய்
4. தலைவன்
5. வளர்ச்சி

## 15 பேய்க்குப் பலியிடுதல்

### விருத்தம்

(1) கண்டனன் பேயை என்றோர் 1கருத்திலான் கூறின் [அன்னுன்
2விண்டது மெய்யே என்பார் வேண்டுமோம் பலிகளென்பார்
3பெண்டிரும் சிறவர் தாமும் 4பேதையர் எல்லாம் அஞ்சி
5கொண்டவண் கோழியாடும் கொடும்பலி இடுவராம்மா!"

## 16 முனிபிடித்த பெண்டிர்

### கட்டளைக் கலித்துறை

1அம் மனை யாட்டியர் நோயினில் ஆட்படும் [வேளைதன்னில்
செம்மைசால் ஓர் முனிச் சேட்டையே என்றதைச் [செப்பிடுவார்
3அம்மவோ அன்னவர் ஆடிடும் ஆட்டமும் பாட்டுமெல்லாம்
4இம்மையில் கண்டவர் எசுதல் இன்றியே பேசுவரோ."

(15) 1. உணர் வில்லாதவன்
2. கூறியது

(16) 1. வீட்டுப் பெண்கள்
2. ஒழுக்கம் மிகுந்த

3. பெண்கள்
4. அறிவற்றவர்கள்
5. கொண்டுபோய் அங்கு

3. ஆச்சரியம்
4. இவ்வுலகில்

## 17 மந்திரக்காரர் சூழ்ச்சி

### வெண்பா

“பேச்சிற் [1]பிதற்றிடுவார் பே யென்று [2]கூவிடுவார்
ஆச்சென்று கைவீசி ஆடிடுவார்—[3]எச்செல்லாம்
கேட்டுக் குடிகெடுக்கும் கீழான வஞ்சகரை
[4]வீட்டிடுவோம் இவ்வுலகை விட்டு.”

## 18 சகுனம் பார்த்தல்

### ஆசிரியப்பா

“விடியின் தீய வீண் செயல் என்னின்
கெடுமே உலகம் [1]படுமென ஆர்ப்பார்
பேசிடுங்காலை பெரும்புலி யென்பார்
கூசுதல் இன்றி கூறுவர் [2]மானம்
அளவில் நூல்கள் ஆய்ந்தவர் என்பார்
[4]களம் பல கண்ட களிறுகள் என்பார்
இல்லில் நின்று எகிடுங் காலை
பல்லி யொலித்தால் பயந்தே செல்லார்
பூனை குறுக்கே போவதைக் கண்டால்
யானை போல்வார் என் செய்வேமென்பர்
[5]மங்கல மில்லாள் [6]மறுகில் செல்லின்
தங்கியே விடுவர். [7]தறுகண் வீரர்
இன்னோர் செயலை எண்ணின்
என்னுளம் பாகாய் இளகிடும் இங்கே,”

(17) 1. உளறுவார்
2. சப்தமிடுவார்
3. இகழ்ச்சிச் சொல்
4. அழித்திடுவோம்

(17) 1. கெடும்
2. தன் மானம்
3. ஆராய்ந்தவர்
4. போர்க் களம்
5. கணவனற்றவள்
6. வீதி
7. அஞ்சாமை

19 ## ஆலயங்களில் பொருள் அழிவு

### விருத்தம்

"இங்குள கோடி [1]மாந்தர் [2]இடர்க்கடல் ஆழ்ந்து நிற்கப்
பொங்கிய பாலும் தேனும் பூசனைப் பொருள்களோடு
குங்குமக் கலவை யாவும் [3]குகை வழிச்சென்றே வீழ்தல்
எங்குமில் செய்கை யாமென் றியம்புவர் அறிவின் மிக்கார்,"

20 ## ஆலயப் பொருளைப் பயன்படுத்தும் முறை

### கட்டளை கலித்துறை

"[1]மிக்க பன் மாந்தரும் மேனிலை யுற்றிடற் கெண்ண
[மிட்டால்
இக்கணத் தேமடம் ஆலயம் தேங்கிய செல்வமெல்லாம்
[2]தொக்கவே சேர்த்து பல் கல்வியும் கைத்தொழிற் சாலையுமாய்
சிக்கனத் தாக்கிடின் சேருமோ சீழ் நிலை [3]செப்பிடுமே."

(19) 1. மக்கள்
2. துன்பக்கடல்
3. கழிவுநீர்வழி

(20) 1. இப்பொழுதே
2. ஒன்றாக
3. கூறுங்கள்

21 ## கல்லாதமாந்தர் நிலை

### வெண்பா

"செப்பிடினே கல்விச் செழுங்கடலை [1]நீந்தியவர்
இப் புவியின் மேலாய் [2]இலங்குவரே—[3]முப்போதும்
கல்லாத [4]மாந்தரையே கண்டாலென் னுள்ளந்தான்
சொல்லாது சோர் வுற்றழும்."

22 ## கல்வியின் நிலை.

### ஆசிரியப்பா

"அழுதிடும் குழவி அன்னையின் காப்பால்
பழுதில தாகி பசிப்பிணி நீங்கும்
முயற்சியே எதையும் முடித்திடும் [1]கருவி
[2]அயர்ச்சியே ஆக்கம் சிதைத்திடும் வாளாம்

கல்வியில் சிறிதும் கருத்திலாராகிப்
[3]புல்லியர் ஆவார் புலம்பித் திரிவார்
எல்லாம் அறிவேம் எமக்கினி யொன்றும்
செல்லாதெனவே செப்புவர் அன்னோர்.
[4]பத்துப் பத்தில் [5]பத்தும் இரண்டும்
வித்தையில் தேரின் விளம்பவும் வேண்டுமோ?
நன்முறைக் கல்வியை வளர்த்தல்
[6]நாவலந்தீவில் நாம் காண்கிலமே."

(21) 1. கற்றவர்
2. விளங்குவார்
3. எக்காலத்திலும்
4. மக்கள்

(22) 1. ஆயுதம்
2. சோர்வு
3. அற்பர்கள்
4. நூறு
5. பன்னிரெண்டு
6. நமதுநாடு

## 23 கல்வியைப் பரப்பும் முறை

### விருத்தம்

காண்டதூக் கினிதன்றுய [1]காரிருள் நீக்க வெண்ணின்
வேண்டுதல் [2]வெய்யோ னல்லால் வேறு [3]மின்மினியினுமோ?
தூண்டிடக் கலையை எண்ணின் [4]துடிப்பினே [5]ராணைபோக்கி
யாண்டுமோ [6]ராறு திங்கள் இதற்கென எல்லைவைப்பாம்

## 24 கட்டளைக் கலித்துறை

வைத்த இவ்வெல்லையில் [1]வாகுடன் கல்வியை கற்கிலரேல்
மெத்தவே அன்னவர் தண்டனைக்காகுவர் மேலுமிங்கே
சொத்தினைப் [3]பற்றுதல் செய்குவம் என்றிடின் சோம்பலின்றி
அத்தனை பேர்களும் ஆவலாய்க் கல்வியைக் கற்பரன்றே.

(23) 1. கரியஇருட்டு
2. சூரியன்
3. மின்மினிப்பூச்சி
4 கடுமையாக
5. கட்டளை
6. ஆறுமாதம்

(24) 1. ஒழுங்காக
2. மிகுதியாக
3. பறிமுதல் செய்தல்

25 கற்றோர் கடன்

வெண்பா

"கற்றோர்கள் கல்லார்தம் [1]கண்ணைத் திறப்பாரேல்
எற்றாலும் இந் நாடு [2]எற்றமுறும்—சற்றே
நமக்கென்ன என்றிருப்பின் நம்மருமைத் தாய் நா(டு)
[3]இமக்காடாய் போகுமதை எண்ணு."

26 கல்வியும் தொழிலும்.

ஆசிரியப்பா

[1]"எண்ணும் இயலும் இயைதல் அன்றி
பண்ணும் வினைகள் பலபல வேண்டும்
கல்வியைக் கற்றோர் [3]கவின் தொழிலின்றி
[4]அல்லல் உற்றதை அறிகுவம் அன்றே
இயந்திர சாதனம் எவர்க்கும் நாட்டின்
பயன் தரு நிலையில் பரவிடல் வேண்டும்
கைத்தொழில் தம்மைக் கல்வியோ டொன்றிப்
பத்திரமாகப் பயிலுதல் வேண்டும்.
கணிதத் தியல்பும் [5]ககனத் தன்மையும்
[6]அணுவின் தன்மையும் அறிந்திடல் வேண்டும்.
இன்ன பல்லறிவும் பெற்று
நன்னிலை யடைய நாம் முயல்குவமே."

(25) 1. அறிவுக்கண்
2. சிறப்புறும்
3. சுடுகாடு (குறுக்கல்விகாரம்)

(26) 1. கணக்கும்
2. இலக்கண இலக்கியம்
3. அழகிய
4. துன்பம்
5. வானவெளி
6. அணுச்சக்தி

27 மேல் நாடும்--கீழ்நாடும்

விருத்தம்

[1]"முயல்வலர் மேலை நாட்டின் [2]மூதறிவாளர் என்றும்
அயர்விலர் இயற்கை தம்மை ஆள்வலிபெற்றார் நாமோ
செயலிலராகி [3]வேதம் செப்பிடு நிலையை நண்ணி
[4]மயல்கொடு வாழும் தன்மை மாறிடக் காண்டல் என்றோ!"

## 28 தாய் மொழித் தொண்டு

### கட்டளைக் கலித்துறை

"என்று நம் முன்னுேளோர் இன் தமிழ் போற்றலை விட்டனரோ
அன்று நின்றின்று நாம் [1]அம்மவோ தாழ்ந்தனம் [2]ஐயமுண்டோ
சென்று நம் தாய்மொழித் தொண்டினைச் செய்திடச் சேர்ந்து விட்டால்
நன்று நன்றென்று இக் [3]ஞானிலம் போற்றிடக் [4]காண்குதுமே."

(27) 1. முயற்சியில் வல்லவர்
2. பேரறிவுடையோர்
3. வேதத்தைச் சொல்லும்
4. மதிமயக்கத்துடன்

(28) 1. ஆச்சரியம்
2. சந்தேகம்
3. பூமி
4. காண்போம்

## 29 தாய்மொழியும்--பிறமொழியும்

### வெண்பா

[1]"காணின் தமிழ் மொழியைக் கற்றவுடன் மென்மேலும்
[2]பேணிப் பலமொழியும் பெற்றிடலாம்—[3]நீணிலத்தில்
உன்தாயைப் போற்றியபின் ஊர்த்தாயைப் போற்றுதலே
உன்கடமை யாகும் உணர்."

## 30 பெற்றோர் கடமை

### ஆசிரியப்பா

"உணரும் பெற்ரோர்க் [1]கொருகடன் உண்டு
குணத்தின் மிக்க [2]குழவியை வேண்டின்
ஒழுக்கக் கல்வியும் உண்மை அன்பும்
[3]அழுக்கற ஒன்றை [4]ஆய்ந்துணர் தன்மையும்
[5]தொண்டுசெய் உள்ளமும் தோழமைப் பண்பும்
உண்டா தற்கே உழைமின் பெரியீர்.
மூன்று விழியன் முனியன் பேயென
ஈன்ரோர் பயத்தைக் யேற்றிடல் [6]தீது
பூச்சாண்டி காட்டும் புன்மையும் நீக்கி
தீச் செயல் விட்டு திறம்பட வளர்மின்
இளைஞரைப் போற்றும் முறைமை
இதுவென உணர்தல் ஈன்ரோர் கடனே

(29) 1. ஆராயுமிடத்து
2. பாதுகாப்புடன்
3. விரிந்தபூமியில்

(30) 1. ஒருகடமை
2. குழந்தை
3. குற்றமற
4. ஆராய்ந்துணர்தல்
5. பிறர்க்கு உதவிசெய்தல்
6. குற்றம்

## 31 கடன் பட்ட ஏழையின் நிலை

### விருத்தம்

"கடன் 1சுமை ஆற்ருயேழைக் கண்கள் நீர் சோர ஏங்கி
2மிடலுடன் உழைத்தும் வாழ்வில் மேனிலை காணல் செய்யார்
உடற் பசிக் குணவும் ஆடை உறைவிடம் தானுமின்றேல்
3மடமிகும் உலக வாழ்வில் மாண்டிடல் நேர்மையன்ருே."

## 32 உழைப்பிலார்க்குப் பொருள் இல்லை

### கட்டளைக் கலித்துறை

"நேர்மையின் ஓர் பணி செய்திடா மூடர்தம் 1இல்லினெல்லை
சேர்ந்திடும் குன்றுபோல் செல்வமும் 2அந்நிதிக்குப்
[பையெல்லாம்
ஊர்தனை யேய்த்ததால் வந்த தென்றே அதன் உண்மை கண்டு
3ஆர்வலர் ஆட்சியின் 4ஆணையால் ஏழைகட் 5காக்கல் செய்வார்"

(31.) 1. பாரம்
2. வலிமையோடு
3. அறியாமை மிகுந்த

(32) 1. வீட்டின் கண்
2. மிகுந்தசெல்வம்
3. விருப்ப முடையோர்
4. உத்திரவு
5. பங்கிட்டுக்கொடுத்தல்

## 33 உழவர் இழிநிலை

### வெண்பா

"செய்வார் பகலெல்லாம் சேற்றினிலே நின்றுழவை
1உய்யும் வகையே உணராரே—2ஐயகோ!
உண்பார் அவர் பொருளை 3ஊதாரிக் கூட்டத்தார்
கண்திறவார் அன்னவரைக் கண்டு."

## உணவைப் பெருக்கும் முறை.

### ஆசிரியப்பா.

"கண்டும் இரங்காக் [1]கயவர்தம் மாட்டு
பண்டே யேழையின் பாட்டால் வளர்ந்து
ஆயிரத் தெண்ணின் அகன்றிடப் பெற்ற
மாயிரு வேலி [2]மாண்புலம் தம்மை
மீட்டே [3]உழைப்பில் மீக்கூர்ந்தார்க்குப்
பாட்டிற் கேற்பப் [4]பகிர்ந்தளித் திடினே
உணவின்வறுமை ஒழிந்திடும் உலகில்
ஒரு குழிநிலனும் உணவின்றாக
இருப்பின் அதனை [5]யேற்றிடும் ஆட்சி
அவர்க்கும் தண்டம் அளித்திடு மெனினே
உண்ணற் குணவும் பெருகும்
எண்ணம் இருப்பின் இதுமிக வெளிதே."

(33) 1. பிழைக்கும் வழி
2. ஐயோ
3. பயனற்றவர்கள்

(34) 1. கீழ்மக்கள்
2. மாட்சிமை உடைய நிலங்கள்
3. உழைப்பில் மிகுந்தவர்
4. பிரித்துக் கொடுத்தல்
5. பிடித்துக் கொள்ளும்

35 சுகாதாரம்

### விருத்தம்

"கண்டவர் உண்மை தன்னை கல்வியை [1]அணுகிலார்க்கு
[2]விண்டிடல் கடனே வீதி வீட்டுடன் ஊர்கள் யாவும்
தொண்டினில் தூய்மை எய்தித் [3]தோமறு வாழ்க்கை [4]மேவப்
பெண்டிரும் யாரும் தூய்மை பெற்றிடுமென்றே சொல்வீர்"

36 நம்மனோர் மேற்கொள்ள வேண்டியமுறைகள்

### கட்டளைக் கலித்துறை

"சொல்லினில் [1]வன்மையும் [2]சோர்விலாத் தன்மையும் பெற்று [நம்மோர்
நல்லியல் பாளராய்[3]நானெனக்கே யெனும் தன்மை விட்டும்
[4]இல்லவர் போற்றியே எக்கமும் அச்சமும் இன்றி யென்று
தொல்லைகள் நண்ணிடில்[5] துச்சமாய் எண்ணியேவாழ்தல் நன்றாம்

(35) 1, நெருங்காதவர் (கறகாதவர்)
2, சொல்லுதல்
3. குற்றமற்ற
4. பொருந்த

(36) 1. உறுதி
2. நல்லதன்மை
3. நான் எனது என்னும் ஆசைகள்
4. ஏழைகள்
5. அற்பமான

## 37 சங்க நூல்களும்—பிற்கால நூல்களும்

### வெண்பா

"நற்குறளு முச்சங்க நூல்களையும் [1]நண்ணாது
[2]பிற்கால கற்பனையைப் பேசிடுதல்—[3]பொற்பூரும்
[4]நல்மனையைக் கைவிட்டு நாசப் [5]பரத்தரிடம்
[6]புல் லுதலே மானும் புரி."

## 38 நாட்டின் இயற்கைவளமும் தனியாட்சியும்.

### ஆசிரியப்பா

"[1]புரிவளை சூலால் புலம்பிடும் [2]வாரிகள்
திருவுடை நாட்டின் [3]திகழ் படாமாகும்
வேங்கடங் குமரி விரிந்த நல் எல்லையில்
பாங்குடன் உளது பரந்த நம் நாடு
இரும்பும் எஃகும் எரிநிலக் கரியும்
விரும்பும் தோரியம் விலையுயர் பொருளும்
தங்கமும் மணியும் தயங்கிய [4]கனிகளும்
எங்கும் உண்டு என்குறை நமக்கு
[5]வாரிதி நீரையும் [6]செய்யாய் மாற்றித்
[7]தேரினை ஓட்டும் திறமுளார் நம்மவர்
அறிஞரும் வீரரும் ஆயிரக்கணக்கில்
செறிந்துளர் இந்த செந்தமிழ் நாட்டில்
அயலார் நம்மை ஆண்டிடல் இன்றி
[8]இயலமை ஆட்சி யெய்துவோம் தனியே."

(37)
1. நெருங்காது (கல்லாமல்)
2. புராண இதிகாசங்கள்
3. அழகு படரும்
4. நல்லமனைவி
5. தாசிகள்
6. கூடுதல்

(38)
1. வளைந்தசங்குகள்
2. கடல்கள்
3. விளங்கும் போர்வை
4. சுரங்கங்கள்
5. கடல்
6. பெட்ரோல்
7. மோட்டார் வண்டி
8. நல்ல அமைப்புள்ள ஆட்சி

## 39 அயலாரை அகற்றுதலும், சூளுரையும்

### விருத்தம்

தனியர [1]சோச் சங்காலைத்தலைநகர் சென்னையாகும்
இனி அயல் [2]மாக்கட் கிங்கு இடம் துளியேனுமின்றி
[3]கனிவுடன் கலந்துவாழக் கருதிலாதவரும் ஏக
நனிமுயன் றுழைத்து மென்ன நம்மனோர் [4]சூள்தல் செய்வாம்

## 40 நாட்டு வாழ்த்து

### கட்டளைக் கலித்துறை

"வாழியர் சீர்திருத்தத்துடன் நம்மவர் வாழ்க என்றும்
வாழிய அன்புடன் [1]சீலமும் [2]வாய்மையும் யாவுமொன்றி
வாழிய உண்மையும் [3]நேர்மையும் [4]ஆண்மையும் ஒன்றி நின்று
வாழிய செந்தமிழ் நாடென யாம்தினம் வாழ்த்துவமே."

(39)
1, செலுத்துதல்
2, மக்கள்
3. அன்புடன்
4. உறுதி கொள்ளல் (சத்தியம்)

(40)
1. ஒழுக்கம்
2· சொல்தவறாமை
3, நேரியவழியில்செல்லுதல்
4- ஆளும்தன்மையும்

(முற்றிற்று)

# "கொக்ரக்கோ"

## கோழி வாத்து ஆகிய வீட்டுப் பறவைகளின்
## ஜீவரக்ஷகன்

உங்கள் கோழிகள் காலரா, அம்மை முதலிய தொத்து நோயால் மாண்டு போவது கண்டு மனமுடைகிறீர்களா? இனி கலங்க வேண்டுவதில்லை. எங்கள் கோழி ஜீவரக்ஷகன் "கொக்ரக்கோ"வை ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள். "வந்த பின் காப்பதைவிட வருமுன் காப்பது" சிறப்பு. எங்கள் தயாரிப்பான "கொக்ரக்கோ" கோழிகளுக்கு வியாதி வராமல் தடுப்பதில் கைகண்டது. ஆகாரத்துடன் கலந்தோ, தனித்தோ இம் மருந்து கோழிகளின் உடலில் ஏறிப்போவதால் கோழிகட்கு நோய் வருவதேயில்லை. கோழிகள் ஆரோக்யமாயும் புஷ்டியாயும் இருக்கின்றன. அடைகாக்கும் கோழிகட்கு மூன்று தினம் உபயோகத்தில் உஷ்ணம் தீர்ந்து மறுபடியும் முட்டையிடும் பக்குவம் பெறுகிறது. இம் மருந்தைக் கையாண்டபின் நம் கோழிகள் வெயில் காலத்தில் காலரா, அம்மை இவற்றால் மாண்டுபோகுமே என்ற பயம் சிறிதும் வேண்டியிராது என்பதை நிச்சயமறியலாம். கோழிப் பண்ணையாளருக்கு இது ஓர் அரிய வரப்பிரசாதம்

இன்றே வாங்கவும்

**1 பவுண்டு டின் விலை ரூ. 2-4-0.**
**சாம்பிள் பாக்கட்டு விலை அணா 0-8-0.**

சாம்பிள் பாக்கட்டுக்கு தபால்தலை அனுப்பவும்.
பாக்கிங், போஸ்டேஜ் தனி.

---

கிடைக்குமிடம்:-

**செல்லம் ஏஜன்சி.**

தாசர்புரம், தின்னனூர். R. S.

# கக்குவானுக்கு

ஹரிதாசர் மருந்தே கைகண்டது
விலை ரூ. 1-4-0.

## மற்ற உயரிய சித்த மருந்துகள்

தாசர் காலரா மருந்து புட்டி ரூ. 1-4-0
தாசர் விஷக்கடி மருந்து ,, 1-4-0
தாசர் வைசூரி மருந்து ,, 1-4-0
தாசர் லாக்ஸோ (சுகபேதிக்கு) 1-4-0

*மற்ற சித்த மருந்துகளுக்கு கேட்லாக் எழுதினால் அனுப்பப்படும்.*

Dr. H. தேவதாஸ், பி. ஏ , எல். டி., எம். டி. எஸ்ஸி.,

**தாசர் சித்த வைத்தியசாலை**

*தாசர்புரம், தின்னனூர்.* M. S M.

T2
R60